மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு 'இல்லை' என்று பதில் சொல்லவில்லை. தொழில் முனைவோர் அங்கு தொழில் துவங்க முன்வந்தால், நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்றுதான் சொல்கிறோம். அதுமட்டுமல்லாமல், அருகில் இருக்கக்கூடிய தூத்துக்குடியில் 294 ஏக்கர் பரப்பளவில் உணவு பதப்படுத்தும் தொழிற்சாலை செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. அந்தப் பகுதியில் இருக்கக்கூடியவர்கள் அங்கே தொழில் துவங்குவதற்கு முன்வந்தால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உதவி செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 397, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

397—

பேருந்து வசதி

***36890—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம், தருமபுரி மண்டலம் சார்பில், தருமபுரி–சென்னை வழித்தடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் கொடி அசைத்து துவக்கி வைக்கப்பட்டு 23–1–2013 முதல் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2014 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

திரு. அ. பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரியிலிருந்து சென்னைக்கு UD விரைவுப் பேருந்துகள் 5 இயங்கிக்கொண்டிருந்தன. அவற்றில் தற்போது 4 பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அந்த விரைவுப் பேருந்துகள்மூலம் படிப்பவர்களும், நோயாளிகளும், பெரியோர்களும், வயதானவர்களும் சென்றுவர ஏதுவாக இருந்தது. தற்போது சாதாரண பேருந்துகளில் பயணம் செய்வதற்கு அவர்கள் சிரமப்படுகின்றனர். எனவே, இந்த நான்கு விரைவுப் பேருந்துகளுக்குப் பதிலாக சொகுசுப் பேருந்துகளை, குளிர்சாதனப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியத்தில் சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லுக்குச் சென்றுவர தொப்பூர், ஜருகு, அரகாசனஅள்ளி, சின்னம்பள்ளி வழியாக பெண்ணாகரம், ஒகேனக்கல் சென்று வர புதிய வழித்தடத்தில் ஒரு பேருந்தும், தருமபுரி, சாமிசெட்டிப்பட்டி, கமலநத்தம், எருமம்பட்டியான்கொட்டாய், ஜருகு வழியாக பள்ளி மாணவர்கள் சிரமமின்றிச் சென்று வர புதிய வழித்தடத்தில் ஒரு பேருந்தும் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுடன் தருமபுரி– சென்னை வழித்தடத்தில் 18 பேருந்துகள் மூலம் 36 நடைகள் இயக்கப்பட்டு, தற்போது மக்களுடைய பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இந்த 18 பேருந்துகளில் பயணிகளின் அடர்வு 72 சதவிகிதம் மட்டுமே இருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக* Ultra Deluxe *விரைவுப் பேருந்து வேண்டும் என்ற கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, பயணிகளின் எண்ணிக்கைக்கேற்ப,* Ultra Deluxe *பேருந்து இயக்க நடவடிக்கை*

எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதி இருக்கின்ற வினாக்கள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) வேலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள், நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் 6 அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தின் தூண்களுள் முக்கியத் தூணாக விளங்கிக் கொண்டிருக்கின்ற நீதித் துறை, நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில் நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளையும் எனது தலைமையிலான அரசு ஏற்படுத்தித் தருகிறது. கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்காக, 225 கோடியே 19 இலட்சம் ரூபாய் நிதியினை எனது தலைமையிலான அரசு ஒதுக்கியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இதன் தொடர்ச்சியாக, வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் உள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்தில் 18 நீதிமன்றங்கள் போதிய இடவசதியின்றி இயங்கி வருவதைக் கருத்தில் கொண்டும்,